III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S. 34/2014

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Tmt.R.Santhi, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 09-01-2020

| | | | |
|---|---|---|---|
| Name | :Sivakumar | Caste | : |
| Father's/Husband's Name | :Bhaktavatchalu | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk: | |

<u>பிரதிவாதிகள் 7 முதல் 9 மற்றும் 11 தரப்பில் குறுக்கு விசாரணை-</u> 'ஏ' ஷெட்யூலில் சொத்தில் அயிட்டம் எண் 8, 9, 10, 11 மற்றும் 16 யார் வாங்கிய சொத்து என்றால் சுப்பையா நாயுடுவின் 4 மகன்கள் சேர்ந்து 1974ல் வாங்கிய சொத்துக்கள் ஆகும். 'ஏ' ஷெட்யூலில் சொத்தில் அயிட்டம் 1, 2, 3, 4, 5, 6, 12 மற்றும் 15 யார் வாங்கியது என்றால் சுப்பையா நாயுடு வாங்கியதாகும். 'ஏ' ஷெட்யூலில் சொத்தில் அயிட்டம் 13 மற்றும் 14 யார் வாங்கிய சொத்து என்றால் விஸ்வஜோதி பிரிக் ஒர்க்ஸ் என்ற நிறுவனம் வாங்கிய சொத்துக்கள் ஆகும். விஸ்வஜோதி பிரிக் ஒர்க்ஸின் பங்குதாரர்கள் யார் யார் என்றால் சுப்பையா நாயுடு மற்றும் பாபு நாயுடு ஆவார்கள். பாபு நாயுடு தன்னுடைய பங்கை எந்த வருடத்தில் ரிலீஸ் செய்தார் என்றால் 1978 ஆகும். பிறகு விஸ்வஜோதி பிரிக் ஒர்க்ஸ் ரீகான்ஸ்டியூட் செய்த போது யார் யார் பங்குதாரர்களாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சுப்பையா நாயுடு அவருடைய 4 மகன்களை பங்குதாரர்களாக சேர்த்தார். சுப்பையா நாயுடு தனக்காக 50 சதவீத பங்கை வைத்துக் கொண்டார். சுப்பையா நாயுடுவின் ஒரு மகன் பக்தவட்சலு க்கு 12.5 சதவீத வைத்தார். கோவிந்தசுவாமிக்கு 12.5 சதவீதம் வைத்தார் விஜயா என்பவருக்கு 12.5 சதவீதம் வைத்தார். சுலோச்சனா என்பவருக்கு 12.5 சதவீதம் வைத்தார். விஜயாவின் கணவர் ராமமூர்த்தியை ஏன் பங்குதாராக சேர்க்கவில்லை என்றாலும் அதற்கான காரணம் உண்டா என்றால் அவர் அரசாங்க வேலையில் இருந்ததால் சேர்க்கவில்லை. சுலோச்சனாவின் கணவர் தாமோதரன் ஏன் பங்குதாரராக சேர்க்கப்படவில்லை என்றால் அவருக்கு உடல் நிலை சரியில்லாதால் அவருடைய மனைவி சுலோச்சனாவின் பெயரில் தான் பங்கு தரப்பட்டது. ஒவ்வொரு பங்குதாராருக்கும் மாதம் ரூ.300/- ரெமுனரேசனாக கொடுக்கப்பட்டு வந்தது. பங்குதாரர் பக்தவட்சலு 1992ல் இறந்துவிட்டார்.

பக்தவட்சதிற்கு பதிலாக யார் யார் பங்குதாரர்களாக சேர்க்கப்பட்டனர் என்றால் அவருடைய மகன்களான நான் சிவக்குமார் மற்றும் என்னுடைய அம்மா சாந்தி, என்னுடைய சகோதரர் கார்த்திக் சேர்க்கப்பட்டார்கள். மேற்சொன்ன எல்லோருக்கும் சேர்த்து 12.5 சதவீதம் ஷேர் என்றால் சரிதான். ரீகான்ஸிட்டியூட் செய்த பிறகு ரெமுனரேசன் மாதம் ரூ.300/லிருந்து ரூ.500/- ஆக உயர்த்தப்பட்டது. சுப்பையா நாயுடு 1993ல் காலமானார். சுப்பையாநாயுடு காலமான பிறகு அவருடைய பங்கினை அவருடைய 4 மகன்கள் சமமாக பிரித்துகொண்டார்கள். ரீகான்ஸிட்டியூட் செய்த பிறகு ஒவ்வொரு மகன்களுக்கும் 25 சதவீதம் பங்கு ஒதுக்கப்பட்டது. சுப்பையா நாயுடு மகள் வனஜா எப்போரும் பங்குதாரராக இருந்ததில்லை அவர் எந்த காலத்திலும் பங்குதாரராக சேர்க்கப்படவில்லை. கோவிந்தசாமி 2009ல் காலமானார். 2009ல் மேற்சொன்ன நிறுவனம் கலைக்கப்பட்டது. பிசினஸ் மொத்தமாக கோவிந்தசாமியின் மனைவி சுகந்திக்கு அசைன்மெண்ட் செய்யப்பட்டது. 'பி' செஷட்யூல் சொத்து செங்கரை கிராமத்தில் உள்ளது. 'பி' செஷட்யூல் சொத்தில் சுமார் 14 ஏக்கர் நிலம் என்னுடைய அப்பா பக்தவட்சலு பெயரில் இருந்தது. அந்த நிலத்தை என்னுடைய அப்பா அவருடைய பணத்தை போட்டு வாங்கினார். வாங்கிய காலத்திலிருந்து அவர் இருக்கும் காலத்தில் அவர் அனுபவித்து வந்தார் அதன் பின்னர் அவருடைய மகன்கள் அனுபவித்து வருகிறோம். அந்த கிராமத்தில் கோவிந்தசாமிக்கு சுமார் 58 ஏக்கர் நிலம் இருந்தது. கோவிந்தசாமி அவருடைய பணம் போட்டு மேற்சொன்ன சொத்தை வாங்கினார். வாங்கிய காலத்திலிருந்து அவர் இருக்கும் காலத்தில் அவர் அனுபவித்து வந்தார் அதன் பின்னர் அவருடைய வாரிசுகள் அனுபவித்து வந்தனர். 'சி' ஷெட்யூல் சொத்து அயிட்டம் 1 மற்றும் 2 கோவிந்தசாமி வாங்கியதாகும் மேற்சொன்ன சொத்து கிரெடிட்டில் பர்சேஸ் செய்ததாகும். பின்னிட்டு கோவிந்தசாமியே அந்த கடனை கட்டிவிட்டார். 'சி' ஷெட்யூல் சொத்தில் அயிட்டம் 3 என்னுடைய அப்பா பக்தவட்சலு வாங்கியதாகும். அந்த நேரத்தில் சுப்பையா நாயுடு இருந்தாரா என்றால் இருந்தார். மேலே குறிப்பிட்டுள்ள நிலங்களில் எதற்காக பயன்படுத்தப்பட்டது என்றால் விஸ்வஜோதி பிரிக்ஸ் இண்டஸ்டிரிஸிற்காக பயன்படுத்தப்பட்டது.

குறுக்கு விசாரணை ஒத்தி வைப்பு.